# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

## அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6ஆம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 06.06.12 | 1. தூத்துக்குடி மாநகராட்சியானது, நகராட்சியாக இருந்த போது 13.47 ச.கிமீ பரப்பளவும், 2001ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 2,16,054 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரமாக இருந்தது. தூத்துக்குடி நகரானது துறைமுக நகரமாகவும், தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்கள் நிறைந்த பகுதியாக விரிவடைந்ததை தொடர்ந்து, தமிழக அரசு தூத்துக்குடி நகராட்சியை 05–08–2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தி தற்போது மாநகராட்சியாக இயங்கி வருகிறது. மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டபோது நகராட்சியுடன் அருகில் உள்ள அத்திமரப்பட்டி, முத்தையாபுரம், சங்கரப்பேரி, மீளவிட்டான் மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய கிராம பஞ்சாயத்து பகுதிகளை இணைத்து 90.66 சதுர கிமீ பரப்பளவுடன் 3,20,466 லட்சம் மக்கள் தொகை கொண்ட மாநகரமாக இயங்கி வருகிறது.<br><br>இம்மாநகராட்சிக்கு தூத்துக்குடியிலிருந்து 40 கிமீ தொலைவில் வல்லநாடு என்ற இடத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு மின் மோட்டார்கள் மூலம் பம்பிங செய்து தூத்துக்குடி நகருக்கு மூன்று பைப் லைன்கள் மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு 8 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. தற்போது வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 22 மில்லியன் லிட்டர் தண்ணீர் மட்டுமே வரபெற்று 3 தினஙகளுக்கு ஒரு முறை குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.<br><br>தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஐந்து ஊராட்சிப் பகுதிகளுக்கு கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மிக குறைந்த அளவு மேல்நிலை தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு அதிக அளவிலான பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.<br><br>தற்போது தூத்துக்குடி நகர் பகுதிக்கு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்படும் நீர் ஆதாரம் நகர்புற மக்களின் தேவைக்கே மிகவும் குறைவாக இருப்பதால், இணைக்கப்பட்ட ஐந்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் தற்போதைய நிலையில் நகராட்சி குடிநீர் பகிர்மான அமைப்பினை கிராமபுறப் பகுதிகளுக்கு விரிவு படுத்தும் வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது.<br><br>தூத்துக்குடி மாநகரின் இணைக்கப்பட்ட ஐந்து கிராம ஊராட்சிகளையும் சேர்த்து 2012ஆம் ஆண்டின் மக்கள் தொகை 3,70,896 எனவும், 2014 ஆம் ஆண்டு மக்கள் தொகை 3,86,024 எனவும், 2029 ஆம் ஆண்டு 4,61,664 எனவும், 2044ஆம் | 125) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

ஆண்டு மக்கள் தொகை 5,37,304 எனவும், 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு மக்கள் தொகை 3,70,896 என்ற மக்கள் தொகையின் அடிப்படையில் 135 lpcd வீதம் குடிநீர் வழஙக தற்போதைய நிலையில் நாளொன்றுக்கு 50.07 மில்லியன் லிட்டர் குடிநீரும், தொழிற்சாலை மற்றும் வனிக நிறுவனஙகளையும் இணைத்து மொத்தம் 58.92 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. ஆனால் தற்போது தூத்துக்குடி நகரத் தேவைக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 22 மில்லியன் லிட்டர் தண்ணீர் மட்டுமே பெறப்பட்டு வருகிறது. மேலும் ஐந்து கிராம ஊராட்சிகளுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் அளவு நாளொன்றுக்கு 2.18 மில்லியன் லிட்டர் என கணக்கிடப்பட்டுள்ளது. தற்சமயம் மொத்தம் நாளொன்றுக்கு 24.18 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே தேவையான அளவிற்கு மாநகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 2012ம் ஆண்டுக்கு கூடுதலாக 34.74 மில்லியன் லிட்டர் தேவையாக உள்ளது.

மேற்கண்ட கணக்கீட்டின் அடிப்படையில் 2044ம் ஆண்டு மக்கள் தொகை 5,37,304 என்ற மக்கள் தொகையின் அடிப்படையில் தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனஙகளையும் இணைத்து மொத்தம் 97 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது.

எனவே தூத்துக்குடி மாநகராட்சியின் நீர் ஆதாரத்தை பெருக்கி மாநகராட்சி பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்வது மிகவும் அத்தியாவசிய தேவையாக இருந்ததை முன்னிட்டு 4வது பைப் லைன் அமைத்து மருதூர் அணைகட்டு பகுதியிலிருந்து குடிநீர் பெற திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது. 4 வது பைப் லைன் அமைக்க ரூ.282.44 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட பின்னர் மாநகராட்சி பொது நிதியிலிருந்து புதிய அலுவலக கட்டிடம், பாதாள சாக்கடை திட்டம், பக்கிள் ஓடையின் மேம்பாட்டு பணிகளில் மாநகராட்சியின் பஙகுத் தொகையாக ஏராளமாக பொதுநிதி வழஙகப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி பொதுநிதியிலிருந்து முழுமையாக திட்டத்தை செயல்படுத்த இயலாத நிலையில் இருப்பதால், திட்டத்தின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட விபரப்படி நிதி திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| a). Grant from JICA assisted TNUIP | - 70.61 crore | i.e. | 25% |
| b). Loan from JICA assisted TNUIP | - 70.61 crore | i.e. | 25% |
| c). Grant from IUDM | - 112.98 crore | i.e. | 40% |
| d). ULB contribution | - 28.24 crore | i.e. | 10% |
| **T O T A L** | **- 282.44 Crore** | | **100%** |

மேற்கண்ட நிதி ஆதாரஙகளைப் பெற மாநகராட்சி நிதி ஆதாரஙகளை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதனை உறுதி செய்ய மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பவும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, சென்னை அவர்களின் 25.05.2012 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. JICA assisted TNUIP நிதி ஆதாரத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலம் கடன் மற்றும் மான்யஙகளை கீழ்க்கண்ட விபரப்படி பெற்று இத்திட்டத்தை செயல்படுத்திடவும், குடிநீர் இணைப்பு வழஙகுவதற்கான வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணஙகளை கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்வதற்கு தீர்மானஙகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| a). Grant from JICA assisted TNUIP | - 70.61 crore | i.e. | 25% |
| b). Loan from JICA assisted TNUIP | - 70.61 crore | i.e. | 25% |
| c). Grant from IUDM | - 112.98 crore | i.e. | 40% |
| d). ULB contribution | - 28.24 crore | i.e. | 10% |
| **T O T A L** | **- 282.44 Crore** | | **100%** |

| வ. எண் | விபரம் | வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாதது | தொழிற்சாலை உபயோகம் |
|---|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை (ரூபாயில்) | ரூ.10000/– | ரூ.20000/– | ரூ.40000/– |
| 2 | குடிநீர் கட்டணம் (ரூபாயில்/ மாதாந்திர கட்டணம்) | குறைந்தபட்சம் ரூ150.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ15.00 | குறைந்தபட்சம் ரூ300.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ30.00 | குறைந்தபட்சம் ரூ450.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ45.00 |

2. இம்மாநகராட்சிக்கு வழஙகப்படும் மாநில திட்ட நிதிகுழு நிதியிலிருந்து திட்டத்திற்கு ஒதுக்கப்படும் கடன் மற்றும் வட்டியினை, கடன் முடியும் வரை பிடித்தம் செய்து கொள்ள மாமன்றம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழஙகி, அதற்ககுரிய ஒப்புதல் நிர்வாக அனுமதியுடன் பெற்று வழஙக வேண்டும்.

3. வருடாந்திர வரி வசூல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் 80 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க மாநகராட்சி நிர்வாகம் நடடிவக்கை எடுக்க வேண்டும். மேலும் வசூல் சதவீதம் குறையாமல் இருக்க மாநகராட்சி ஆணையர் எடுக்கும் தொடர் நடவடிக்கைகளுக்கு மன்றம் ஒப்புதல் வழஙக வேண்டும்.

4. நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு வைப்பு தொகையின் வித்தியாசத் தொகையினை ஏற்கனவே இணைப்பு பெற்ற வரிவிதிப்பாளர்களிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்றம் இதற்கான ஒப்புதல் வழஙக வேண்டும்.

5. திட்ட காலமான மூன்று ஆண்டுகளில் மாநகராட்சி 10 சதவீத திட்ட தொகையினை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்றம் ஒப்புதல் வழஙக வேண்டும்.

6. 40 சதவீத திட்ட தொகையினை, IUDM போன்ற திட்டஙகள் மூலம் அரசு மான்யமாக பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மாமன்றம் ஒப்புதல் வழஙக வேண்டும்.

7. தாமிரபரணி படுகையிலிருந்து போதிய அளவு தண்ணீர் எடுக்க திட்ட ஒப்பந்தம் வழஙகுவதற்கு முன்னர், Water Utilization Committee ன் ஒப்புதல் பெற மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. Project Implementation Unit ஒன்றினை தேவையான அளவு அலுவலர்களை கொண்டு அமைக்க வேண்டும் அல்லது, Project Management Consultant ஒருவரை நியமனம் செய்ய TNUIFSL / சென்னை, நகரட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழஙகப்பட மாமன்றம் ஒப்புதல் வழஙக வேண்டும்.

9. நான்காவது பைப் லைன் திட்டத்தினை செயல் படுத்தவும், கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் போதிய நிலம் உள்ளதை உறுதிசெய்ய வேண்டும்.

10. மேற்கண்ட திட்டம் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழஙகுதல் குறித்த பிரேரணை அனுப்புதல் மற்றும் திட்டம் தொடர்பாக வாஙகும் கடன் மற்றும் மான்யம் தொடர்பான ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பம் செய்திட மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழஙகிட மாமன்றம் அனுமதி வழஙக வேண்டும்.

இம்மாநகரட்சி பகுதிக்கு நாள் ஒன்றிற்கு 2012ம் ஆண்டுக்கு தேவையான 58.92 மில்லியன் லிட்டர் மற்றும் 2044ம் ஆண்டுக்கு 97 மில்லியன் லிட்டர்தண்ணீர் பெற்று சீரான குடிநீர் விநியோகம் செய்யவும், ரூ. 282.44 கோடி மதிப்பீட்டில் நிதி ஆதாரம் பெற மேற்கண்ட 10 (பத்து) நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலவலக குறிப்பு :** மாநகராட்சி மற்றும் ஐந்து கிராம ஊராட்சிகளுக்கும் 2012ம் ஆண்டுக்கு தேவையான 58.92 மில்லியன் லிட்டர் மற்றும் 2044ம் ஆண்டுக்கு தேவையான 97 மில்லியன் லிட்டர் தண்ணீர் பெற்று சீரான குடிநீர் விநியோகம் செய்ய 4வது பைப் லைன் குடிநீர் திட்டம் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். எனவே 4வது பைப் லைன் திட்டத்தை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் திட்டம் தொடர்பாக அரசு மான்யம் மற்றும் கடன் பெறவும், மாநகராட்சி பொது நிதியை பயன்படுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

1. JICA assisted TNUIP நிதி ஆதாரத்தை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலம் கடன் மற்றும் மான்யங்களை கீழ்க்கண்ட விபரப்படி பெற்று இத்திட்டத்தை செயல்படுத்திடவும், குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களை கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| a). | Grant from JICA assisted TNUIP - | 70.61 crore | i.e. | 25% |
| b). | Loan from JICA assisted TNUIP - | 70.61 crore | i.e. | 25% |
| c). | Grant from IUDM - | 112.98 crore | i.e. | 40% |
| d). | ULB contribution - | 28.24 crore | i.e. | 10% |
| | **T O T A L -** | **282.44 Crore** | | **100%** |

| வ. எண் | விபரம் | வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாதது | தொழிற்சாலை உபயோகம் |
|---|---|---|---|---|
| 1 | வைப்புத் தொகை (ரூபாயில்) | ரூ.10000/– | ரூ.20000/– | ரூ.40000/– |
| 2 | குடிநீர் கட்டணம் (ரூபாயில்/ மாதாந்திர கட்டணம்) | குறைந்தபட்சம் ரூ150.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ15.00 | குறைந்தபட்சம் ரூ300.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ30.00 | குறைந்தபட்சம் ரூ450.00/– (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.45.00 |

2. இம்மாநகராட்சிக்கு வழங்கப்படும் மாநில திட்ட நிதிகுழு நிதியிலிருந்து திட்டத்திற்கு ஒதுக்கப்படும் கடன் மற்றும் வட்டியினை, கடன் முடியும் வரை பிடித்தம் செய்து கொள்ள மாமன்றம், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி, அதற்குரிய ஒப்புதல் நிர்வாக அனுமதியுடன் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

3. வருடாந்திர வரி வசூல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் 80 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க மாநகராட்சி நிர்வாகம் நடடிவக்கை எடுக்க வேண்டும். மேலும் வசூல் சதவீதம் குறையாமல் இருக்க மாநகராட்சி ஆணையர் எடுக்கும் தொடர் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

4. நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு வைப்பு தொகையின் வித்தியாசத் தொகையினை ஏற்கனவே இணைப்பு பெற்ற வரிவிதிப்பாளர்களிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்றம் அனுமதி வழஙகலாம்.

5. திட்ட காலமான மூன்று ஆண்டுகளில் மாநகராட்சி 10 சதவீத திட்ட தொகையினை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மன்றம் அனுமதி வழஙகலாம்.

6. 40 சதவீத திட்ட தொகையினை, IUDM போன்ற திட்டஙகள் மூலம் அரசு மான்யமாக பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

<table>
<tr><td></td><td>

7. தாமிரபரணி படுகையிலிருந்து போதிய அளவு தண்ணீர் எடுக்க திட்ட ஒப்பந்தம் வழுங்குவதற்கு முன்னர், Water Utilization Committee ன் ஒப்புதல் பெற மாநகராட்சி நடவடிக்கைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

8. Project Implementation Unit ஒன்றினை தேவையான அளவு அலுவலர்களை கொண்டு அமைக்க வேண்டும் அல்லது, Project Management Consultant ஒருவரை நியமனம் செய்ய TNUIFSL / சென்னை, நகரட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழஙகப்பட மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

9. நான்காவது பைப் லைன் திட்டத்தினை செயல் படுத்தவும், கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் போதிய நிலம் உள்ளதை உறுதிசெய்வது தொடர்பான மாநகராட்சி நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.

10. மேற்கண்ட திட்டம் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழஙகுதல் குறித்த பிரேரணை அனுப்புதல் மற்றும் திட்டம் தொடர்பாக வாஙகும் கடன் மற்றும் மான்யம் தொடர்பான ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பம் செய்திட மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழஙகிட மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3 /22751/ 2008

</td><td></td></tr>
<tr><td></td><td>

2. தூத்துக்குடி மாநகராட்சியானது 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 25.10.2011 முதல் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சஙகரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாநகராட்சி பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகள், மேம்பாட்டு பணிகள், மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பான சீரமைப்பு பணிகள் செய்வதற்கு போதிய நிதி இல்லாததாலும், மேலும் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் மின் மோட்டார் மூலம் பம்ப் செய்து மாநகர பகுதியில் உள்ள ராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் குடிநீரேற்றி மாநகர பகுதியில் உள்ள மற்ற மேல்நிலை நீர்தெக்க தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு, மேற்கண்ட விநியோகத்தால் ஏற்படும் மின்சார செலவினம் மற்றும் மின்தடை காலத்தில் மோட்டார் இயக்குவதற்கு தேவையான டீசல் ஆகியவற்றால் ஏற்படும் செலவினஙகளால் குடிநீர் கட்டணம் மூலம் பெறப்படும் வருமானத்தை காட்டிலும், குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்காக செய்யப்படும் செலவினம் கூடுதலாக இருந்து வருகிறது. குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் மட்டுமே செய்யும் நிலை ஏற்படுகிறது. மூலதன பணிகள் ஏதும் (CAPITAL WORK) செய்ய இயலாத நிலை உள்ளது.

மேலும் தற்போது மாநகராட்சியுடன் இணைந்துள்ள பஞ்சாயத்து பகுதிகளில் பல்வேறு குடிநீர் உள்கட்டமைப்பு பணிகள் செயல்படுத்தும் பொருட்டு போதிய நிதி நிலை இல்லாததால் பின்வரும் பட்டியலில் கண்டுள்ளவாறு குடிநீர் கட்டணம் மற்றும் வைப்பு தொகை நிர்ணயம் செய்வது அத்தியாவசியமாகிறது.

மேலும் 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம பஞ்சாயத்து பகுதிகளில் குடிநீர் கட்டணமாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் தொகையை காட்டிலும், குடிநீர் கட்டணமாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படும் தொகை மிகவும் அதிகமாக உள்ளது

தூத்துக்குடி மாநகராட்சியின் நீர் ஆதாரத்தை பெருக்கி மாநகராட்சி பகுதியில் சீரான குடிநீர் விநேியோகம் செய்வது மிகவும் அத்தியாவசிய தேவையாக இருந்ததை முன்னிட்டு 4வது பைப் லைன் அமைத்து மருதூர் அணைகட்டு பகுதியிலிருந்து குடிநீர் பெற ரூ.282.44 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டில் 10 சதவீதம் தொகை ரூ28.24 கோடியினை மாநகராட்சி பஙகளிப்பாகவும், 25 சதவீதம் தொகை ரூ70.61 கோடியினை தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியில் கடனாக பெற்று திரும்ப செலுத்தி, திட்டத்தினை செயல்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

எனவே மாநகராட்சியின் நிதிநிலையினை கருத்திற்கொண்டும், மின்கட்டணம், எரிபொருள் கட்டணம் ஆகியவற்றின் விலையேற்றத்தை கருத்திற்கொண்டும் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள விபரப்படி குடிநீர் கட்டணம் மற்றும் குழாய் இணைப்பு வைப்பு தொகைகளை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td>126) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**குடிநீர் கட்டணம்**

| வ. எண் | குடிநீர் குழாய் இணைப்பின் தன்மை | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் | புதியதாக நிர்ணயம் செய்யப்படும் குடிநீர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ50.00 (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000லிட்டருக்கும் ரூ3.50 | குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ150.00 (10000லிட்டர்வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ15.00 |
| 2 | வீட்டு உபயோகம் அல்லாதது (வணிகப் பயன் பாடு) | குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ100.00 (10000லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ10.00 | குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ300.00 (10000லிட்டர்வரை) கூடுதல்ஒவ்வொரு1000 லிட்டருக்கும் ரூ30.00 |
| 3 | தொழிற்சாலை உபயோகம் | குறைந்தபட்ச மாத கட்டணம் ரூ150.00 (10000 லிட்டர் வரை) கூடுதல் ஒவ்வொரு 1000லிட்டருக்கும் ரூ15.00 | குறைந்தபட்ச மாத கட்டணம் (10000லிட்டர்வரை) ரூ.750/– கூடுதல் ஒவ்வொரு1000 லிட்டருக்கும் ரூ.75.00 |

**குடிநீர் குழாய் வைப்பு தொகை**

| வ.எண் | குடிநீர் குழாய் இணைப்பின் தன்மை | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு வைப்பு தொகை | புதியதாக நிர்ணயம் செய்யப்படும் குடிநீர் குழாய் இணைப்பு வைப்பு தொகை |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | ரூ.3000/– | ரூ10000/– |
| 2 | வீட்டு உபயோகம் அல்லாதது | ரூ 6000/– | ரூ20000/– |
| 3 | தொழிற்சாலை உபயோகம் | ரூ 6000/– | ரூ40000/– |

**அ.கு –** மாநகராட்சியின் நிதிநிலையினை கருத்திற்கொண்டும், மின்கட்டணம், எரிபொருள் கட்டணம் ஆகியவற்றின் விலையேற்றத்தை கருத்திற்கொண்டும் ரூ282.44 கோடி மதிப்பீட்டில் 4 வது பைப் லைன் திட்டத்தில் மாநகராட்சியின் பங்கு தொகைரூ28.24 கோடி செலுத்த வேண்டியது இருப்பதாலும், பெறப்பட இருக்கும் கடன் தொைக ரூ70.61 கோடியினை திரும்ப செலுத்த வேண்டியது இருப்பதாலும், இணைக்கப்பட்ட 5கிராம ஊராட்சிகளில் குடிநீர் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாலும், பட்டியலில் கண்டுள்ள விபரப்படி குடிநீர் கட்டணம் மற்றும் குழாய் இணைப்பு வைப்பு தொகைகளை நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ3/8349/2012

---

3. இம்மாநகராட்சி பாளையங்கோட்டை ரோட்டில் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட நல்ல தண்ணீர் கால்வாய் செல்லும் இடத்தில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களின் மேல் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களை அப்புறப்படுத்த மாமன்ற வழக்கறிஞரிடம் சட்ட கருத்து கேட்கப்பட்டது. மேற்படி ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அப்புறப்படுத்த தடை ஏதும் இல்லை எனவும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம் என 24.05.2012ம் தேதிய சட்டக்கருத்துருவில் மாமன்ற வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி நல்ல தண்ணீர் கால்வாய் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பு கட்டிடங்களை இடிப்பதற்கும் கட்டிட இடிபாடு பொருட்களை அப்புறப்படுத்துவதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

எப்1/9929/11

127) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 4. ஆணையர், நகர் ஊரமைப்புத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண் 21802/2011–UP1 நாள் 30.03.2012ல் பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு மான்யமாக வழங்கப்பட்ட 2.25 லட்சத்தினை அரசு, தனது அரசாணை எண் 71 குடியிருப்பு மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை நாள் 21.03.2012ல் ரூ.10 லட்சமாக உயர்த்தி, அதில் 90 சதவீதம் அரசு மான்யமாகவும், 10 சதவீதம் உள்ளாட்சி அமைப்பு நிதியாகவும் பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், எனவே பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு உரிய பிரேரணைகளை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட 8 பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்த வகையில் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக நடைமேடை அமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.100.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>1) ரோச் பூங்கா அபிவிருத்தி பணி செய்ய –ரூ. 10.00 லட்சம்<br>2) எஸ்.கே.எஸ்.ஆர். காலனி பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய – ரூ. 12.00 லட்சம்<br>3) வி.வி.டி. பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய – ரூ. 12.00 லட்சம்<br>4) சங்கரநாராயணன் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய – ரூ. 19.50 லட்சம்<br>5) சுப்பையா பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிகள் செய்ய – ரூ. 11.00 லட்சம்<br>6) கதிர்வேல்நகர் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணி – ரூ. 11.50 லட்சம்<br>7) பீச்ரோடு நேரு பூங்காவில் அபிவிருத்தி பணிகள் – ரூ. 10.50 லட்சம்<br>8) மில்லர்புரம் பூங்காவில் நடைமேடை மற்றும் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணி – ரூ. 14.00 லட்சம்<br>---------------<br>மொத்தம் –ரூ.100.50 லட்சம்<br>---------------<br><br>மேற்கண்ட 8 பூங்கா மேம்பாட்டு பணிகளை எடுத்து செய்யவும், அதற்கான மதிப்பீடுகளை அனுமதிக்கவும் 90% அரசு மான்யமாக ரூ.72.00 லட்சம் பெறவும், மீதமுள்ள தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/6756/2012 | 128) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. தூத்துக்குடி மாநகராட்சியானது 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 25.10.2011 முதல் முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.<br><br>தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம ஊராட்சிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் சீராக இல்லாததாலும், தற்போது கோடைகாலமாக இருப்பதாலும், தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைவாக உள்ளதாலும், மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மாநகராட்சி வார்டு எண் 1, 2, 3, 5, 17, 18 ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள தெரு பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சுமார் 15 தினங்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.<br><br>மேலும் 15 தினங்கள் வரை கிடைக்கும் குடிநீரை சேமித்து வைப்பதால், மேற்படி நந்நீரில் ஏற்படும் ஏடிஸ் (Aedes) வகை கொசுக்களினால் தற்போது | 129) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் பரவி வரும் டெங்கு காய்ச்சல் ஏற்படும் சூழல் மாநகர பகுதியில் ஏற்படுவதை தடுத்து நிறுத்திடவும், மேற்கண்ட வார்டு பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டும் மாநகராட்சி நிர்வாகம் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அத்தியாவசியமாகிறது.<br><br>மேலும் மாநகராட்சியில் உள்ள இரண்டு குடிநீர் டேங்கர் லாரிகள், ஏற்னவே மாநகராட்சி வார்டு பகுதியின் கடைகோடி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் கிடைக்காத பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 5 கிராம ஊராட்சி பகுதிகளுக்கு தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது. எனவே மேற்கண்ட வார்டு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கோடைகால குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்கவும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தற்காலிகமாக தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும், அது வகைக்கு மாதம் ஒன்றிற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.530000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பதாயிரம்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br>1) வார்டு எண் 1, 2, 3, 5, 17, 18 ஆகிய பகுதி பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டும், அத்தியாவசிய தேவையான குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பொருள் தொடர்பாக ஏற்படும் செலவினத்திற்கு குடிநீர் பணி அவசியம் கருதி மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ3/8451/2012 | |

மேயர்,

மாமன்றம், தூத்துக்குடி

மாமன்றம், தூத்துக்குடி.

நாள்: 05.06.2012